04.02.2026 பி.வா.சா.1 சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி. (ஒ.எஸ்.எண்.240 /2015 ) திரு.எம்பெருமாள்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> -

1) எதிர்கோரிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்து விவரத்தில் நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் அளந்து காண்பிக்க வேண்டுமென்று போடப்பட்ட மனுவின் உத்தரவின் அடிப்படையில் மனுவில் பிறந்த உத்தரவின் மூலம் வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் எதிர்கோரிக்கை சொத்து விவரத்தை தவறாக அளந்து காண்பித்தார் என எனதுநிருபண வாக்குமூலத்தில் போடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வாய்க்கால் தண்ணீர் போவதை காண்பிக்காமலும் மச்சுப்படி போவதை காண்பிக்காமல் போடப்பட்டுள்ளது. வழக்கறிஞர்ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை தவறு என்றுவேறு ஒரு ஆணையர் நியமனம் செய்து எதிர்கோரிக்கை சொத்தை அளவீடு செய்ய வேண்டி புதிய மனு தாக்கல் செய்தேனா என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். அவ்வாறு மனு தாக்கல் செய்து அந்த மனு தள்ளுபடி ஆகிவிட்டது என்று சொன்னால் 2 வது மனுபோட்ட விவரம் எனக்கு தெரியாது. பிராது பாரா 5 ல் மேற்படி தபசில் கண்ட சொத்தானது தங்களுக்குப் பாத்தியப்பட்டதாக 1 ம்பிரதிவாதியானவர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வாதி மீது அ.வ.எண்.167/1991 என்ற வழக்கினை தாக்கல் செய்திருந்தார். மேற்படி வழக்கானது 29.10.1993 ல் மேற்படி நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டியிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது அந்த வழக்கில் நானோ, எனது அப்பாவோ, அம்மாவோ தரப்பினர் அல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கையில் அ.வ.எண்.167/1991 வழக்கில் நாங்கள் தரப்பினர்கள் இல்லை என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் தரப்பினர் இல்லை. எனது முதல் விசாரணை நிருபண வாக்குமூலத்தில் பாரா 12 ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை எனது எதிர்கோரிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான், ஆணையர் அறிக்கை சம்பந்தமாக சொல்ல தேவையில்லை. தற்போது காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ல் கண்ட சொத்து விவரத்தில் நான்கு மால்கள் விவரத்தில் படித்துக்காண்பித்து அவ்வாறு உள்ளதா என்று கேட்ட போது எழுத்து புரியவில்லை என்று சாட்சி கூறுகிறார். சொத்து விவரத்தில் கிருஷ்ணன் வீட்டிற்கும் கிழக்கு என்று உள்ளது என்றால் சரியல்ல.

2) வாதி தரப்பில் 1978 ஆம் ஆண்டு தாக்கல் செய்த வா.சா.ஆ.2 ஆவணத்தை காண்பிக்கப்பட்டு சா.மலையாண்டிக்கோனார் வீட்டிற்கு கிழக்கு என்று உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2. குறிப்பாக எழுதிய மலையாண்டிக்கோனார் எனது தாத்தா என்றால் சரிதான். மலையாண்டி தகப்பனார் பெயர் சண்முகக்கோனார் என்றால் சரிதான். வாதி தரப்பில் தாக்கல்செய்யப்பட்டுள்ள தீர்ப்பு ஆவணத்தில் வா.சா.ஆ.7 ஆவணத்தில் 3 வது பக்கத்தில் தபசில்சொத்து விவரத்தில் கிருஷ்ணன் வீட்டிற்கு கிழக்கு என்று காண்பிக்கப்பட்டுள்ளது பற்றி தெரியுமா என்றால் அந்த வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்பதால் எனக்கு தெரியாது. எனது எதிர்கோரிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள 1,2 தபசில் சொத்துக்களுக்கு நான்கு மால் விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எதிர்கோரிக்கை 1 வது தபசில் சொத்து எனக்கும், வாதிக்கும்கூட்டாக பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம்கோரியுள்ளேன் என்றால் அது சர்க்கார் புறம்போக்கு ஆகும். 1 வது தபசில் சொத்து சர்க்கார் புறம்போக்கு நிலம்என கூறியுள்ளநிலையில் தமிழக அரசையும், வருவாய் துறையையும் எனது எதிர்கோரிக்கையில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை காண்பித்து எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம்என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் சண்முகக்கோனார் குமாரர் மலையாண்டிக்கோனாருக்கு, மலையாண்டிக்கோனார் குமாரா சொக்கையாக்கோனார் தனக்காகவும், தன் மகன் மைனர்கள் கொம்பன்,நயினார் இவர்களுக்கு பிதாவும்,கார்டியன் நிலையில் கிரையப்பத்திரம் என்று கண்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் தற்போது குடியிருந்து வரும் வீடு பூர்வீக வீடு என்றால் எனது சித்தப்பாவுக்கு பாகம் மூலம்கிடைக்கப்பெற்று எனது சித்தப்பாவும், எனது தாத்தாவும் எனது தந்தைக்கு எழுதிவைத்துள்ளார்கள். பி.வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தை காண்பித்துஅதில் எனது தாத்தாவும்,சித்தப்பாவும் எனது தந்தைக்கு எழுதிக்கொடுத்த சொத்தில் கீழ்பாதி வீடும் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தைகாண்பித்து அந்த ஆவணமானது கோமதிக்கோனார் பெயரில் உள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக அரசு அலுவலகங்களுக்கு நேரிடையாக சென்று மனுசெய்து பட்டா விண்ணப்பம் செய்து பட்டா கோரினால் பட்டா வழங்கப்படும் என்றால் எனக்கு தெரியாது.

3) பி.வா.சா.ஆ.1 வாதிக்குப் பாத்தியப்பட்ட பட்டாவை அதிகாரிகளை சரிகட்டி வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா-சா.ஆ.1 இணையவழித்தளம் மூலமாக அல்லாமல் அதிகாரி கையொப்பம் செய்து வழங்கப்பட்ட ஆவணம் என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.1 எனது கைவசம் எவ்வாறு வரப்பட்டது என்றால் எனது அப்பா இருக்கும் போடப்பட்டதால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த தேதி 22.10.2025 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தந்தை 2023 ஆம் ஆண்டே காலம் சென்று விட்டார் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்க்கோரிக்கை 3 வது பாராவில் வாதியானவர் தான் கட்டியிருக்கும் வீட்டிற்கு படிகள் அமைப்பதற்கு முயற்சி செய்த போது இந்த பிரதிவாதிகள் வாதிகளை படிகள் கட்டக்கூடாதென்றும் தபசில் சொத்தானது தங்களுக்குப் பாத்தியப்பட்டதாகவும் கூறி கடந்த 10.08.2015 தேதியில் இடைஞ்சல் செய்து வருகிறார்கள் என்பது உண்மை தான் என கண்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் தாக்கல் செய்துள்ள எதிர்கோரிக்கையை தான் அவர் காலமான பின்னர் அவரின் வாரிசுகள் ஏற்றுக்கொள்வதாக சொன்னோம் என்றால் சரிதான். எதிர்க்கோரிக்கையில் காட்டப்பட்டுள்ள 1 வது தபசிலுக்கு மேல்புறம் நான் குடியிருக்கும் வீட்டின் அளவு ½ செண்டு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4 ஆவணத்திற்கும் பி.வா.சா.ஆ.6 வது ஆவணத்திற்கும் எந்தவித சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள 1978 மற்றும் 1986 பத்திரங்கள் வா.சா.ஆ.1,2 அசல் ஆவணங்களை வாதி தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.பி.வா.சா.ஆ.7 வருவாய்துறை அலுவலர்களை சரிகட்டி என்னால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 புகைப்படம் எதில் எடுக்கப்பட்டது என்றால் கேமராவில் எடுக்கப்பட்டது. எந்த கேமராவில் எடுக்கப்பட்டது என்றால் எனதுஅப்பா எடுத்துள்ளார் எப்படி எடுத்தார் என்றுஎனக்கு தெரியாது. போட்டோ எடுத்து ஸ்டுடியோவில் கழுவப்பட்டியிருக்கும் என்றால் எனது அப்பா தான் எடுத்துள்ளார். பிவா.சா.ஆ.10 ஆவணம் இந்திய சாட்சிய சட்டம் 65 பி-ன்படி உரிய சான்றுடன் தாக்கல் செய்யப்படாததால் சாட்சியசட்டப்படி ஏற்றுக்கொள்ளக் கூடியதில்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி- வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்கவேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
04.02.2026.